

கோவை மாநகர் மாவட்டம், நந்தா நகர் பகுதி, 57வது வட்டக் கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் பகுதி கழக பொறுப்பாளர் எஸ்.எம். சாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் கல்பனா செந்தில், பொதுக்குழு உறுப்பினர் ஆடிட்டர் சசிகுமார், மாமன்ற உறுப்பினர் சாந்தமணி பன்னீர்செல்வம், வட்டக் கழக பொறுப்பாளர்கள் சண்முகம், சரவணன், மாரிமுத்து உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயத்தை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து கழகம் நடத்தும்

# ஆகஸ்ட் 3 தஞ்சை ஆர்ப்பாட்டத்தில் அணிதிரள்வோம்!

## கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அழைப்பு!



சென்னை, ஆக 1 - நீரின்றி தவிக்கும் நிலத்தினை பார்த்து பார்த்து கண்ணீர் வடிக்கும் ஒட்டு மொத்த விவசாயிகளின் குரலாய், டெல்டா மாவட்டத்தின் நலன் கருதி கழகத் தலைவர்திராவிட மாடல் அரசின் நாயகர் தளபதி அவர்கள் அறிவித்து இருக்கும், ஆகஸ்ட் 3 அன்று எதிர்க்கட்சி தலைவர் எதிர்கால தமிழ்நாட்டின் நம்பிக்கை உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற இருக்கும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கழகத்தின் விவசாய அணியின் சார்பில் பெருந்திரளாக பங்கேற்று ஆர்ப்பாட்டத்திற்கு வலு சேர்ப்போம் வாருங்கள் என அழைப்பு விடுத்து மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது .

தமிழ் நாடு உலக அரங்கில் தவிர்க்கமுடியாத மாநிலமாக உருவெடுக்க காரணமாய் இருந்தது முத்தமிழ் அறிஞர் கலைஞர் எனும் நவீன தமிழ்நாட்டின் சிற்பியும், திராவிட மாடல் அரசின் பிதாமகர் தளபதி அவர்களும் கொடுத்த அற்புத திட்டங்கள்தான். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்கிற பொன்மொழியை மேடைகளில் மட்டுமே பேசிய அரசியல்வாதிகளுக்கு மத்தியில் உழவையும் தொழிலையும் உயிர்ப்போடு இருக்க உன்னதத் திட்டங்களை தந்தது தி.மு.க. ஆட்சிதான் .

அப்படி செழித்துவந்த விவசாயத்தை எந்த அடிப்படையும் இன்றி ,ஆதியும் அந்தமும் தெரியாமல் வெறும் சினிமா மோகத்தால் மட்டுமே போலி வேஷமிட்டு ஆட்சிப்பொறுப்புக்கு வந்திருக்கும் தற்போதைய வேதனை தரும் த.வெ.க. ஆட்சி, விவசாயத்தை பற்றியும் , விவசாய தொழிலாளர்களை பற்றியும் எதுவுமே தெரியாமல் விவசாயிகளை வீதிகளில் போராடவிட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

**கடன் தள்ளுபடியில் ஏமாற்றம்**

ஆட்சிக்கு வந்ததும் விவசாய கடனை தள்ளுபடி செய்வோம் என்று அறிவித்துவிட்டு, அவர்களே எதிர்பார்க்காமல் ஆட்சிப்பொறுப்பிற்கு வந்த த.வெ.க. அரசு , 50 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே முழுக் கடன் தள்ளுபடி என்ற வெற்று அறிவிப்பை வெளியிட்டு, அதன் காரணமாக விவசாயிகள் வெகுண்டெழுந்து தற்போது வரை போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**மேகதாது விவகாரத்தில் அரசின் மெத்தனம்**

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்தே மேகதாது அணை கட்டுவதில் கர்நாடக அரசு தீவிரம் காட்டி வருகிறது. அதற்காக கர்நாடக அரசு ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களை கர்நாடக முதலமைச்சர் நேரில் சந்தித்து மேகதாது நிதியுதவி கோரி மனு அளித்தும் , ஒன்றிய ஜல்சக்தி துறை அமைச்சரை நேரில் சந்தித்து மேகதாது திட்டத்துக்கு ஒப்புதல் வழங்க வலியுறுத்தியும் , டெல்லியில் கர்நாடகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களுடன் கூட்டம் நடத்தி, மேகதாது அணை கட்டக் கடைமடை மாநிலங்களின் அனுமதி தேவையில்லை என நாடாளுமன்றத்தில் ஒன்றிய ஜல்சக்தி துறை தெரிவித்த பதிலை மேற்கோள் காட்டியும் பேசவைத்துள்ளது.

அதேபோல கர்நாடக அமைச்சர் ராமலிங்க ரெட்டி, கர்நாடக அரசின் டெல்லி பிரதிநிதி, கர்நாடக அரசின் தலைமை வழக்கறிஞர் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் மேகதாது அணை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, ஊடகங்களிடம் தொடர்ந்து மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் எனவும், தமிழ்நாடு அரசின் அனுமதி தேவையில்லை எனவும் பேசி வருகிறார்.

ஆனால் இதற்கு மாறாக, இவ்விவகாரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியதோடு தனது கடமை முடிந்து விட்டது என மவுனம் காத்து , தனது திரைப்படத்தின் வசூலை பெருக்க மார்க்கெட்டிங்க் செய்துவருகிறார். இதற்கிடையில், தமிழ்நாடு முதலமைச்சர் கர்நாடகம் சென்று பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனக்கூறி, இப்போது தமிழ்நாடு சார்பில் சில விவகாரங்கள் தொடர்பாகத் தமிழ்நாடு முதலமைச்சர் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாக, கர்நாடக முதலமைச்சரே தெரிவித்துள்ளார்.

மேலும் இதுதொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் கர்நாடக செல்வதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், காவிரியில் நமக்கு உரிய பங்கினை வழங்க காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டும், அதனை நிறைவேற்ற முடியாது என்று கர்நாடக மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் இன்னும் வாய் திறக்காமல் இருக்கிறார்.

அதுமட்டுமல்ல, மேகதாது விவகாரம் தொடர்பாக ஒரு தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று சட்டமன்றத்தின் மூலம் வலியுறுத்தி இருக்கின்ற நிலையில், இந்த கர்நாடக பயணம் இதனை நீர்த்துபோகச் செய்யாதா? என்ற கேள்வியும் எழுகிறது. இப்படி இந்த த.வெ.க. அரசைப் பொறுத்தவரையில் எந்தத் தகவல்களிலும் தெளிவு இல்லை, எதிலும் வெளிப்படைத்தன்மை இல்லை. எதற்கெடுத்தாலும் குழப்பம், எல்லாவற்றிலும் ஏமாற்றம். இதுவே இந்த அரசின் வழக்கமாக மாறியிருக்கிறது.

தனது திரைப்படம் கர்நாடகாவில் வெளியாவதில் சிக்கல் ஏற்படக் கூடாது என்பதற்காகவே முதலமைச்சர் இதுகுறித்து வெளிப்படையாகப் பேசாமல் அமைதி காக்கும் செயல் விவசாய மக்களுக்கு எதிரானது.

**அனைத்துக் கட்சிக் கூட்டம்**

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகர் தளபதி அவர்கள் , உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தோடு, விவசாயச் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டத்தையும் கூட்டச் சொல்லி பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக ஆலோசனைகளை வழங்கியதோடு, முதலமைச்சருக்கு ஆதரவு அளிக்கும் கட்சிகள் உட்பட தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளும், விவசாயச் சங்கங்களும் அரசுக்குக் கோரிக்கை விடுத்தும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அமைதி காத்து வருகிறார் இந்த முதலமைச்சர்.

கடந்த ஆண்டு 6.5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடந்து சாதனை படைத்த நிலையில், இந்த ஆண்டு மேட்டூர் அணை திறக்கப்படாததால் 1.5 லட்சம் ஏக்கர் சாகுபடி மட்டுமே நடப்பதாகச் செய்திகள் வருகிறது. இதனால் 2,500 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டு 14 இலட்சம் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுத் தவிக்கிறார்கள். எனவே அவர்களுக்கு என்ன செய்யபோகிறது இந்த அரசு என்பது மிகப் பெரிய கேள்விக்குறி.

சினிமா மோகத்தில் ஆட்சிக்கு வந்திருக்கும் இந்த அரசு விவசாயிகளின் வேதனையை புரிந்து கொண்டு செய்யலாற்றிட தவறி இருக்கிறது. எனவே விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்குக் குறுவை நிவாரணமாக 25 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும் . காப்பீட்டுத் திட்டத்துக்கான பிரீமியம் தொகையை அரசே செலுத்தி முழுக் காப்பீடு கிடைக்க உதவிடவும், சம்பா சாகுபடிக்கான மறு முதலீடாக விதை, உரம், பூச்சிக்கொல்லி என இடுபொருட்கள் மானியமாக வழங்கிடவும் இந்த அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி, விவசாயப் பெருமக்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும், காவிரி உரிமையை நிலைநாட்டுவதில் த.வெ.க. அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்தும் வரும் 03.08.2026 அன்று காலை 10.00 மணியளவில், தஞ்சாவூர், பனகல் கட்டடம் அருகில், கழக இளைஞரணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

விவசாயத்திற்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இல்லை என்றாலும் எப்போதும் பாதுகாப்பாக இருக்கும் திமுக நடத்தும் இந்த ஆர்ப்பாட்டத்தில், விவசாயிகளும் விவசாய தொழிலாளர்களும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு விவசாயிகளுக்காகக் குரல் கொடுதது கழகத்தின் கரத்தை வலுப்படுத்த வேண்டும்.

மேலும், அனைத்து விவசாயச் சங்கங்களைச் சேர்ந்த தோழர்களும், இவ்விவகாரத்தில் ஒருமித்த கருத்துடைய அனைத்து அரசியல் கட்சிகளின் தோழர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு விவசாயிகளுக்காக குரல் கொடுக்கும் நம் திராவிட மாடல் அரசின் பிதாமகர் தளபதி அவர்களின் விவசாய கோரிக்கைகளை விரைவில் வென்றெடுக்க துணை நிற்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் என்பது, விவசாயிகளின் குரலைக் கேட்காமல் ரீல்ஸ் மோகத்தில் இருக்கும் த.வெ.க. அரசின் கவனத்தை ஈர்க்கும் முதல் கட்ட நடவடிக்கைதான் என்பதையும் , அரசின் இந்த மெத்தனப்போக்குத் தொடர்ந்தால், நம் இயக்கத்தின் தலைவர் திராவிட மாடல் நாயகர் தளபதி அவர்கள் முன்னெடுக்கும் மிகப்பெரிய போராட்டங்களை நாம் நடத்த வேண்டியிருக்கும் என்பதையும் இந்த அரசுக்கு எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்வோம். இவ்வாறு கழக விவசாய அணிச்செயலாளர் ஏ. கே. எஸ்.விஜயன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கோவை மாவட்டம், ஆனைமலை வட்டம் வேட்டைகாரன்புதூர் அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர், வால்பாறை நகர கழக செயலாளர் குட்டி (எ) சுதாகர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கண்டனர். இதில் பொள்ளாச்சி சார் ஆட்சியர் ராமகிருஷ்ணசாமி உள்பட அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ‘நீட்’ தேர்வும் தி.மு.க.வின் நிலைப்பாடும்!




நீட் தேர்வு ஆணையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு 2013 சூலையில் நீட் தேர்வு அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்று தீர்ப்பளித்தது. ஆனால் மோடி ஆட்சிக்கு வந்தபின் இந்தத் தீர்ப்பின்மீது சீராய்வு விண்ணப்பம் உச்சநீதிமன்றத்தில் போடப்பட்டது. 2013இல் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வில் இருந்த நீதிபதி அனில் தவே நீட் தேர்வு வேண்டும் என்று மாறுபட்ட தீர்ப்பை எழுதினார். அந்த அனில்தவே தலைமையில் அமைக்கப் பட்ட அய்ந்து நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு சீராய்வு கோரிக்கையை விசாரித்தது. 11.4.2016 அன்று அளித்த தீர்ப்பில் 2013இல் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு நீட் தேர்வு வேண்டாம் என்று வழங்கிய தீர்ப்பைத் திரும்பப் பெறுவதாகவும், வழக்கை மீண்டும் முதலிலிருந்து விசாரிக்கப் போவதாகவும் கூறியது.

இந்நிலையில்தான் மோடி அரசு நீட் தேர்வை 2016ஆம் ஆண்டே நடத்த வேண்டும் என்று உச்சநீதி மன்றத்துக்கு அழுத்தம் கொடுத்தது. நீட் தேர்வு குறித்த வழக்கை முறையாக விசாரிக்கப் போவதாகக் கூறிய 17 நாள்களுக்குள்ளாகவே, மோடி ஆட்சியின் விருப் பத்தை நிறைவேற்றும் வகையில் 28.4.2016 அன்று 2016ஆம் ஆண்டு முதலே நீட் தேர்வு நடத்தலாம் என்று கூறியது. உச்சநீதிமன்றத்தில் முதன்மையான வழக்குகளை விசாரிப்பதற்காக அமைக்கப்படும் அமர்வு களில் ஒன்றிய அரசின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப தீர்ப்பு வழங்கக்கூடிய நீதிபதிகளையே தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா நியமிப்பதாக உச்சநீதிமன்றத்தின் செல்ல மேசுவரர் உள்ளிட்ட மூத்த நீதிபதிகள் நால்வர் 2018 சனவரியில் செய்தியாளர்களைக் கூட்டி அறிவித்ததை இவ்விடத்தில் பொருத்திப் பார்க்க வேண்டும்.

திடீரென நீட் தேர்வு மூலம்தான் மருத்துவப் படிப்பில் சேர்க்கை இருக்க வேண்டும் என்ற அறிவிப்புக்குத் தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. வேறு சில மாநி லங்களும் எதிர்த்தன. 2016ஆம் ஆண்டிற்கு மட்டும் விரும்புகின்ற மாநிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப் படும் என்கிற அவசரச் சட்டத்தை ஒன்றிய அரசு பிறப்பித்தது. 2016இல் நீட் தேர்வு நடந்தது. ஆயினும் தமிழ்நாட்டில் 2007 முதல் பன்னிரண்டாம் வகுப்பின் மதிப்பெண் தரவரிசைப்படி ஒற்றைச்சாளர முறையில் மருத்துவப் படிப்பில் மாணவர்களைச் சேர்க்கின்ற நடைமுறை பின்பற்றப்பட்டது. ஆனால் ஒன்றிய அரசு அவசரச் சட்டத்துக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்ற போது, நீட் தேர்வு வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் நிலையில், வஞ்சகமாக 2017ஆம் ஆண்டு முதல் எல்லா மாநிலங்களிலும் அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளிட்ட எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் நீட் மூலமே மாணவர் சேர்க்கையை நடத்த வேண்டும் என்று சட்டம் இயற்றியது.



**சைதை சாதிக்**
**(கழக செய்தித் தொடர்பாளர்)**

1.2.2017 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டது. அ.தி.மு.க. அரசு நீட் தேர்விலிருந்து விலக்கு கிடைத்து விடும் என்று கூறிக்கொண்டிருந்தது. மாநிலப் பாடத் திட்டத்தில் படித்த மாணவர்கள் தமிழ்நாடு அரசின் உறுதி மொழியை நம்பி ஏமாந்தனர். இறுதியில் விலக்கு கிடைக்காததால் நீட் தேர்வு எழுதும் நிலைக்குத் தள்ளப் பட்டனர். மாநிலப் பாடத்திட்டத்தில் பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் மருத்துவப் படிப்பில் சேரு வதற்குத் தேவையான மதிப்பெண்களைப் பெற்றிருந்த போதிலும், நீட் தேர்வில் குறைவான மதிப்பெண் பெற்றதால் மருத்துவப் படிப்பில் சேர முடியாத கொடுமை நேர்ந்தது. அரியலூரைச் சேர்ந்த-தாழ்த்தப்பட்ட வகுப்பினரான அனிதா 1176 மதிப்பெண்ணும் 196.5 கட் ஆப் மதிப்பெண்ணும் பெற்றிருந்தும் மருத்துவப் படிப்பில் சேர முடியாத மனஉளைச்சலால் 1.9.17 அன்று தற்கொலை செய்து கொண்டார். அனிதாவைப் போலவே, பன்னிரண்டாம் வகுப்பில் உரிய மதிப்பெண் பெற்றும் நீட் எனும் நெடுஞ்சுவரைத் தாண்ட முடியாமல் 500க்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட, தாழ்த் தப்பட்ட வகுப்பு மாணவர்களின் மருத்துவக் கனவு நொறுங்கியது.

அதன்பின் தமிழ்நாடு அரசு நீட் தேர்விலிருந்து விலக்கு பெறுவதற்கான எந்த முயற்சியையும் மேற்கொள்ள வில்லை. ஏழரைக் கோடித் தமிழர்களின் சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய சட்டத்தை ஒன்றிய பாஜக அரசு கால்தூசாகவும் மதிக்காமல் கிடப்பில் போட்டது ஒன்றிய மோடி அரசு.

இந்நிலையில் 03.05.2026 அன்று நடைபெற்ற நீட் தேர்வு வினாத்தாள் கசிந்ததால் அந்த தேர்வு ரத்து செய்யப்பட்டு மறு தேர்வு 21.06.2026 அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நீட் வினாத்தாள் கசிவு தொடர்பாக விரிவான விசாரணை நடத்த ஒன்றிய அரசு உத்தரவிட்டதால் சி.பி.ஐ முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து விசாரணையைத் தொடங்கியுள்ளது. இதில் மஹாராஷ்டிராவின் நாசிக்கைச் சேர்ந்த சுபம் கைர்னார், ராஜஸ்தான் ஜம்வா ராம்கரைச் சேர்ந்த தினேஷ் பிவால், மங்கிலால் பிவால், மஹாராஷ்டிராவின் புனேவைச் சேர்ந்த முன்னாள் வேதியியல் பேராசிரியர் குல்கர்னி, பேராசிரியை மனிஷா மாந்தாரே, மனிஷா வாண்டாரே, மஹாராஷ்டிராவின் லத்தூரில் செயல்பட்டு வரும் ரேணுகாய் பயிற்சி மையத்தின் உரிமையாளர் சிவராஜ் ரகுநாத் மோடே கோன்கர் மற்றும் சில மருத்துவ மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

நீட் தேர்வு முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தி நடைபெற்ற மாணவர்கள் போராட்டம், தர்மேந்திர பிரதானின் பதவி விலகலையடுத்து வெற்றி பெற்றுள்ளது. ஆனால், இப்போராட்டத்தை ஒடுக்குவதற்காக பாசிச மோடி அரசு மாணவர்கள் மீது கொடூரமான அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டது. அதனையெல்லாம் நெஞ்சுரத்துடன் எதிர்கொண்டே மாணவர்கள் இவ்வெற்றியைச் சாதித்துள்ளனர்

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு என்று கூறி, ஆட்சிப் பொறுப்பேற்ற த.வெ.க, வினாத்தாள் கசிவு காரணமாக இந்த ஆண்டு நீட் தேர்வு ரத்து செய்யப்பட்ட பிறகும் இது குறித்து எந்தவொரு கருத்தையும் வெளியிடாமல் வாய் மூடி மௌனியாக இருக்கிறது. அத்துடன் நீட் தேர்வு வினாத்தாள் கசிவைக் கண்டித்து சென்னையில் ஒன்றிய அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள சாஸ்திரி பவன் முன்பு போராட்டம் நடத்திய இந்திய மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மீது காவல்துறை தடியடி நடத்தியுள்ளது. ஆளும் கட்சிக்கு ஏற்புடைய கருத்துக்காக போராடுபவர்கள் மீது இவ்வாறு கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் என்ன.

### நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.க. களத்திலும், சட்டமன்றத்திலும், நீதிமன்றத்திலும்

நீட்டுக்கு எதிராக தி.மு.க. முன்னெடுத்த போராட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள்

**1. 13.09.2021 - முதல் தீர்மானம் + மசோதா**

நீட் தேர்வு முடிந்த மறுநாள் “தமிழ்நாடு மருத்துவ படிப்பு சேர்கை மசோதா 2021” சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. நீட்டில் இருந்து தமிழ்நாட்டிற்கு நிரந்தர விலக்கு கேட்கப்பட்டது. இது குடியரசு தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

**2. 28.06.2024 - இரண்டாவது தீர்மானம்**

நீட்-UG வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடுகள் பின்னணியில் மீண்டும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. NMC Act-ஐ திருத்தி நாடு முழுவதும் நீட்டை ரத்து செய்ய கோரிக்கை வைக்கப்பட்டது. முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களே தீர்மானத்தை முன்மொழிந்தார்.

**3. 2017 செப்டம்பர் - அனிதா மரணத்திற்கு பின் கூட்டு போராட்டம்**

அப்போதைய எதிர்கட்சி தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் தாம்பரம், நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் உட்பட தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்பாட்டங்கள். காங்கிரஸ், CPI-M, VCK உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் பங்கேற்றன.

**4. 2022 ஆகஸ்ட் - மாநிலம் தழுவிய உண்ணாவிரத போராட்டம்**

இளைஞர் அணி செயலாளர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது.

- கோரிக்கை: “நீட்டை முழுமையாக ரத்து செய்”

- முதல்வர் ஸ்டாலின்: “நீட் விலக்கு கிடைக்கும் வரை நிறுத்த மாட்டோம்” என உறுதி

- அனிதா உட்பட நீட்டால் உயிரிழந்த மாணவர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

**5. 23.06.2023 - DMK மாணவர் அணி போராட்டம்**

சென்னை சைதாப்பேட்டையில் 1000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற கண்டன ஆர்பாட்டம்.

நாடாளுமன்றம் & தில்லி போராட்டங்கள்

**6. தொடர் நாடாளுமன்ற கண்டன ஆர்ப்பாட்டங்கள்**

திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் நீட் ரத்து கோரி தொடர் கண்டன ஆர்பாட்டங்கள் நடத்தினர்.

**7. MP கனிமொழி: “NEET-ல் ஊழல் இல்லை, NEET-தான் ஒரு ஊழல். நீட்டை தடை செய்ய வேண்டும்” என தெரிவித்தார்.**

**8. ஜூலை 2026 - CJP “Sansad Chalo” போராட்டத்திற்கு ஆதரவு**

- MP திருச்சி சிவா: ராஜ்யசபாவில் “நீட்டை ரத்து செய்வதே எங்கள் ஒரே கோரிக்கை” என வலியுறுத்தினார்.

- MP P. வில்சன்: மாணவர்களின் போராட்டத்தை பாராட்டி, நீட் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் என கூறினார்.

**9. ஜூலை 2026 - டெல்லி போராட்டத்திற்கு ஆதரவு**

திமுக தலைவர் மு.க. ஸ்டாலின், “நீட் ரத்தே நிரந்தர தீர்வு” என அறிக்கை வெளியிட்டு டெல்லி போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார்.

**10. “நீட் விலக்கு, நாம் இலக்கு” - 50 லட்சம் கையெழுத்து இயக்கம்**

சட்டப்பேரவை எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் 50 நாட்கள் நடைபெற்றது. சேகரிக்கப்பட்ட 50 லட்சம் கையெழுத்துகள் குடியரசு தலைவரிடம் வழங்கப்பட்டது.

### திமுக–வின் நிலைப்பாடு

திமுக 2010-ல் இருந்தே நீட்டை எதிர்த்து வருகிறது.

“நீட் சமூக நீதிக்கு எதிரானது. கிராமப்புற, ஏழை மாணவர்களின் மருத்துவ கனவை சிதைக்கிறது” என்பது திமுக-வின் முக்கிய வாதம்.

மாணவர்களின் மூலம் வாக்குகளை பெற்று ஆட்சியைப் பிடித்து விட்டு அவர்களைப் பாதிக்கும் பிரச்சினையில் இவ்வாறு அக்கறையின்றி நடந்து கொள்ளும் முதல்வர் விஜய் தான் நடத்துவது பா.ஜ.கவின் பினாமி ஆட்சி என்பதை தனது நடவடிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இனியாவது விஜய்யின் உண்மை முகத்தை தமிழ்நாட்டு இளைஞர்களும், மாணவர்களும் அறிந்து தெளிவினை பெறட்டும்.